கமத்தொழில் அமைச்சு

பாராளுமன்ற பொது கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் மேற்கொள்ளப்படும் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளும் எடுக்கப்படும் நடவடிக்கைகளும் அடங்கிய அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

CamScanner

CamScanner

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 182

நிறுவனத்தின் பெயர்: கமத்தொழில் அமைச்சு

குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு பிறப்பித்த உத்தரவுகள்	குழு சுட்டிக் காட்டிய குறைபாடுகளை சீராக்க / வழங்கிய சிபாரிசுகளை செயற்படுத்தி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
01. இரசாயன உபரங்களின் பாவனையை தடை செய்தல். இரசாயன உரங்களின் பாவனை செய்யப்பட்டதையடுத்து உற்பத்தியும் பயிர் செய்த நில அளவும் கணிசமான அளவுகளில் குறைந்தமை.	
2021 ஆம் ஆண்டில் மொத்த அரிசி உற்பத்தி சுமார் 33 இலட்சம் மெற்றிக் டொன்கள் என்ற அளவில் இருந்தாலும், 2022 ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி சுமார் 16 இலட்சம் மெற்றிக் டொன்களாக இருக்கும் என அனுமானிக்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் அமைச்சின் பிரதான வகைகூறும் அதிகாரி (பி.வ.அ.) தெரிவித்தார். 2021 ஆம் ஆண்டு மொத்த அரிசி உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் இது சுமார் 50% குறைவு என்றும் அவர் கூறினார். இலங்கையின் வருடாந்த அரிசித் தேவை சுமார் 24 இலட்சம் மெற்றிக் டொன் என்பதால், 2022 ஆம் ஆண்டு அரிசித் தேவையில் சுமார் 8 இலட்சம் மெற்றிக் டொன் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.	21/0746/301/013 ஆம் இலக்க 2021-04-27 திகதிய "காலநிலை மாற்றத்திற்கான நிலையான தீர்வுகளுடன் பசுமையான சமூக-பொருளாதார போக்கை நோக்கி" என்ற தலைப்பில் சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான தீர்மானத்தின்படி, இரசாயன உரங்களின் பயன்பாடு 2021 ஆம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்டது. அதன்படி 2021/22 பெரும்போகத்தில் கமத்தொழில் அமைச்சு நெல் பயிர்ச் செய்கையின் நிமித்தம் சுற்றாடல்நேய உகந்த உரங்கள் மற்றும் இயற்கை கனிம பொட்டாசியம் குளோரைடு ஆகியவற்றை கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு வழங்கியது. 2022 சிறுபோகத்திற்கு சுற்றாடல்நேய உகந்த உரங்கள் தவிர, எக்ஸிம் வங்கி வழங்கிய கடன் நிதியை பயன்படுத்தி இறக்குமதி செய்த 50 கிலோ நிறையுடைய ஒரு யூரியா உர உறையை 10,000 ரூபா விலையில் விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பொசுபரசு தாவரப் போஷனை தேவையை பூர்த்தி செய்ய எப்பாவல ராக் பொசுபரசு பயன்படுத்தப்பட்டது. விவசாயத் திணைக்களம் வழங்கிய தரவுகளின்படி, 2021/22 பெரும்போகத்தில் நெல் பயிர்ச் செய்கையில் விளைச்சல் 37% வீதமாக குறைந்துள்ளது. இது 2022 சிறுபோகத்தில் 23% வீதமாக குறைந்துள்ளது.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

CamScanner

CamScanner

02. கமத்தொழில் அமைச்சிடம் சரியான தரவுகள் இல்லாமை.
கமத்தொழில் அமைச்சிடம் சரியான தரவுகள் இல்லாமை மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் மூலம் சரியான தகவல்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்காமை.

அமைச்சிடம் உள்ள தரவு 100% சரியானதல்ல என்பதை தான் ஏற்றுக்கொள்வதாக பி.வ.அ. கூறினார். அமைச்சு மதிப்பிட்டுள்ள மொத்த நிலப்பரப்பில் விவசாயம் செய்யப்படாததாலும், சில விவசாயிகள் உர மானியம் பெறுவதற்கு பொய்யான தகவல்களை சமர்ப்பித்து அதற்கேற்ப வினைச்சல் கணக்கிடப்பட்டதாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினையை சரி செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும், "GEO Farmer" என்ற கணினி பயன்பாடு (App) அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் பெரும்போகத்திற்கு முன்னதாக பயிரிடப்படும் நிலம் பற்றிய துல்லியமான தரவுகள் கிடைக்கும் என நம்புவதாகவும் பி.வ.அ. கூறினார்.

9000 விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களில் பெரும்பாலானவர்களுக்கு இந்தத் துறை பற்றிய அடிப்படை அறிவு இல்லை எனபதும், 1200 பேர் மட்டுமே உரிய டிப்ளமோ பயிற்சியை நிறைவு செய்திருப்பதும் இங்கு தெரியவந்தது.

சிபாரிசுகள்
கமநல சேவைகள் நிலைக்களம் அங்கமாக சகல நிறுவனங்களுடனும் ஒன்றிணைந்து விவசாயம் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான ஒரு வேலைத் திட்டத்தை தயாரித்து ஒரு மாதத்திற்குள் குழுவுக்கு எழுத்தில் சமர்ப்பிக்குமாறு குழு அமைச்சின் பி.வ.அ. அதிகாரிக்கு உத்தரவிட்டது.

2022 ஆம் ஆண்டு சிறுபோகத்திற்கான உர விநியோகத்தில் முன்கூட்டியே தகவல்கள் சேகரிக்கப்பட்டு அதற்கேற்ப உரம் விநியோகிக்கப்பட்டது. 2022/23 பெரும்போகத்திற்கான தகவல்கள் சரியாக துல்லியமாக சேகரிக்கப்பட்டு தேவையான கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது சோளத்தை பயிரிடும் விவசாயிகள் தம்மை ஒன்லைன் முறையில் பதிவு செய்து வருகின்றனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். உரிய பயிர்ச் செய்கை நிலம் டிஜிட்டல் முறையில் அளவீடு செய்யப்பட்டு, அதற்கேற்ப தகவல்கள் இற்றைப்படுத்தப்படுவதால், எதிர்காலத்தில் வழங்கப்படும் தகவல்களின் துல்லியம் மேலும் மேம்படும்.

மேலும், விவசாயத் தரவுகள் மற்றும் தகவல்களை முறையான, துல்லியமான முறையில் பேணுதல் மற்றும் இற்றைப்படுத்தல் மற்றும் சான்றுகள் அடிப்படையிலான கொள்கை மற்றும் முடிவெடுப்பதன் அவசியம் போன்ற விடய அம்சங்களில் கமத்தொழில் அமைச்சு முக்கிய கவனம் செலுத்தியுள்ளது.

அதன்படி, இந்த நோக்கத்திற்காக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் பில் என்ட் மெலிண்டா கேட்ஸ் பவுன்டேஷன் (BMGF) மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் ஆகியன இணைந்து "இலங்கை விவசாயத்தின் உள்ளடக்கிய டிஜிட்டல் மாற்றம்" கருத் திட்டத்தை ஆரம்பித்துள்ளன. ஐந்தாண்டு திட்டமான இது இரண்டு கட்டங்களாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டம் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது. இதன் மூலம் கமநல சேவைகள் நிலைக்களம் அங்கமாக அனைத்து நிறுவனங்களும் தமது நோக்கங்களுக்காக தற்போது பயன்பாட்டில் உள்ள தரவு முறைமைகள் மற்றும் தற்போது சேகரிக்கப்பட்டு வரும் விவசாய தரவுகள் என்பவற்றை பகுப்பாய்வு செய்து, அனைத்து தரவு முறைமைகளையும் சேகரித்து ஒருங்கிணைந்த ஒன்லைன் தரவு முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான முதற்கட்டப் பணிகள் நிகழ்ந்து வருகின்றன.

இது பின்வருமாறு பல கட்டங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது இந்த திட்டம் பின்வருமாறு இயங்கி வருகின்றது.

1. விவசாயம் தொடர்பான முக்கிய அக்கறையுடைய தரப்புகளுடன் 5 சந்திப்புகளை நடத்தி தேவைகளை இனங்காணுதல், ஏற்கனவே உள்ள தரவு முறைமைகளை இனங்காணுதல், தரவு முறைமைகளிலும் மற்றும் விவசாய தகவல்களிலும் உள்ள இடைவெளிகளை கண்டறிதல்

H.K.A. Ranjith Udayakumara
Chief Finance Officer
Ministry of Agriculture
No.505, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla

Gunadasa Samara
Secretary
Ministry of Agriculture
Govijana Mandiraya,
Rajamalwatta Avenue, Battaramulla

CamScanner

2. இலங்கை நியமங்கள் கட்டளைகள் நிறுவகத்துடன் இணைந்து, இலங்கையில் விவசாயத் துறைக்கு தேவையான சர்வதேச தரங்களை இனங்கண்டு அதன்படி விவசாயத் துறை தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கான ஒரு முறைமையை உருவாக்குதல்.

இதன் இரண்டாம் கட்டமாக டிஜிட்டல் விவசாய திட்டம் உருவாக்கப்படவுள்ளது.

அதன்படி, ஏற்கனவே விவசாய செயல்பாடுகளுக்கு "ஜியோ கொவியா" தரவு முறைமை கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவையானவன பின்வருமாறு,

- விவசாயிகளுக்கு உர நிவாரணத்தை பெற்றுக் கொடுத்தல்.
- விவசாய வாகனங்களுக்கும் இயந்திராதிகளுக்கும் என எரிபொருள் நிவாரணத்தை விவசாயிகளுக்கு வழங்குதல்.

ஆசிய அபிவிருத்தி அடங்கலாக ஏனைய நிறுவனங்களின் மூலம் செயற்படுத்தப்படும் "உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் கூட்டுறவு கடன் நிதி உதவி நிகழ்ச்சித் திட்டத்தின்" விவசாயிகளுக்கு கடன் உதவியை (cash grant) பெற்றுக் கொடுத்தல் முதலியன.

மேலும், இக்குழுவில் கண்டறிந்த விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் தொடர்பாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

- விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் பணிகளின் முறையான செயல்பாட்டிற்காக கடமைப் பட்டியலைத் திருத்தவும், புதிய செயல்திறன் சுட்டியை முறையைத் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மதிப்பீட்டு முறையியல் ஒன்றும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.
- விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் ஊக்குவிப்பு மற்றும் அவர்களின் பொறுப்பு ஆகியன தொடர்பான அறிவுறுத்தல்கள் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.
- விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.
- விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

CamScanner

உத்தியோகத்தர்களுக்கும் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பெயர்கள்	பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களின் பதவிகள்
நுண் நிதித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்	160	• உதவி ஆணையாளர் • கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர் • டிப்ளோமாதாரி விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர் • கமநல சேவை நிலைய முகாமைத்துவ உதவியாளர் • விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்
நுண் நிதிக் கணக்கீடு	160	
நுண் நிதிக் கடன் பிணைமுறி நிதி	160	
தோட்டப் பயிர்ச்செய்கை	400	
நிலுவைக் கடன்களை அறவிடும் பொருட்டு கமநல நியாய சபைக்கு கோவைகளை சமர்ப்பித்தல்	70	
கமக்காரர் வங்கி கொள்கை வெளியீட்டு ஆவணத்தை தயாரித்தல்	25	

கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள டிப்ளோமாதாரி விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla

Gunaseela...
Sec...
Ministry of Ag...
No.80/5, "Govijana Ma...
Rajamalwatta Avenue, Battaramulla.

CamScanner

டிப்ளோமாதாரிகள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கை

	மாவட்டம்	முதலாவது வருடம்	இரண்டாவது வருடம்	மொத்தம்
1	கொழும்பு	4	14	18
2	கம்பஹா	8	19	27
3	களுத்துறை	15	56	71
4	கண்டி	23	26	49
5	மாத்தளை	9	22	31
6	நுவரெலியா	7	54	61
7	காலி	15	189	204
8	மாத்தறை	9	1	10
9	அம்பாந்தோட்டை	59	95	104
10	குருநாகல்	6	0	59
11	சிலாபம்	0	10	16
12	அனுராதபுரம்	5	0	0
13	பொலன்னறுவை	2	18	23
14	பதுளை	2	87	89
15	மொனராகலை	2	24	26
16	இரத்தினபுரி	10	64	74
17	கேகாலை	14	81	95
18	அம்பாறை	2	20	22
19	வவுனியா	0	0	0
20	முல்லைத்தீவு	0	0	0
21	கிளிநொச்சி	0	0	0
22	மட்டக்களப்பு	1	0	1
23	மன்னார்	0	0	0
24	திருகோணமலை	1	0	1
25	யாழ்ப்பாணம்	1	0	1
	மொத்தம்	202	780	982

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

CamScanner

CamScanner

03. உணவுப் பற்றாக்குறைக்கு முகம்கொடுப்பதற்கான நடவடிக்கைகள்
தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் எச்சரிக்கப்பட்டுள்ள உணவு நெருக்கடியை சமாளிக்க அமைச்சினால் ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் எடுக்க என எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள்

ஒரு துரித நடவடிக்கையாக சிறுபோகத்தில் விளைச்சலை அதிகரிக்கும் பொருட்டு தேவையான உரங்களையும், கிருமிநாசினிகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், கரிம உரங்களுக்கு மேலதிகமாக யூரியா உரத்தை பெற்றுக் கொடுக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், 65,000 மெற்றிக் டொன் யூரியா உரத்தின் நிமித்தம் கொள்வனவு கட்டளை விடுக்கப்பட்டுள்ளதாகவும் பி.வ.அ. தெரிவித்தார்.	தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு, எதிர்வரும் காலங்களில் ஏற்படப்போவதாக எச்சரிக்கப்பட்ட உணவு நெருக்கடியை எதிர்கொள்ள அமைச்சு ஏற்கனவே எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் எடுக்கப்படும் என எதிர்பார்க்கும் நடவடிக்கைகள் பின்வருமாறு. 2022/23 பெரும்போகத்தில் நெல் பயிருக்கான தாவரப் போஷனை தேவைகளில் 70% வீதத்தை இரசாயன உரங்களின் மூலம் வழங்க வேண்டும் என்று விவசாயத் திணைக்களம் பரிந்துரைத்துள்ளது. அதன்படி, 2022/23 பெரும்போகத்திற்கு உலக வங்கிக் கடனின் கீழ், 107,000 மெற்றிக் டொன் உரம் இறக்குமதி செய்யப்பட்டது. மேலும் 2023-02-13 ஆம் திகதியளவில் 94,079 மெற்றிக் டொன் உரம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது. 2022/23 பெரும்போகத்தில், 50 கிலோ யூரியா உறையின் மானிய விலை 10,000.00 ரூபாவாக இருந்தது. மேலும், 41,876 மெற்றிக் டொன் உரம் இறக்குமதி செய்யப்பட்டது. 50 கிலோ எடையுள்ள ஒரு உறையை 19,500.00 ரூபா விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 2023-02-13 ஆம் திகதிற்குள் விவசாயிகள் MOP உரத்தைப் பயன்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2,125 மெற்றிக் டொன் MOP உரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. 1 ஹெக்டேயருக்கு 20,000.00 ரூபா பெறுமதியான சுற்றாடல்நேய உரங்களையும் விவசாயிகளுக்கு கமநல சேவை நிலைய மட்டங்களில் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சர்வதேச அபிவிருத்திற்கான ஐக்கிய நாடுகள் முகவர்நிலையம் (USAID) மற்றும் அதற்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) ஆகியவற்றின் உதவியுடன் 2022/23 பெரும்போகத்திற்கு 10,562,047 மெற்றிக் டொன் யூரியா இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2023 சிறுபோகத்தில் நெற் பயிருக்கான தாவரப் போஷனை தேவைகளில் 70% வீதத்தை இரசாயன உரங்களின் மூலம் வழங்க வேண்டும் என விவசாயத் திணைக்களம் பரிந்துரைத்துள்ளது. அதன்படி, 2023 ஆண்டு சிறுபோகத்திற்கு யூரியா உரம், MOP உரம் மற்றும் TSP உரம் ஆகியவற்றின் தேவை முறையே முறையே 75,000, 20,000 மற்றும் 18,000 மெற்றிக் டொன்களாக இருக்கும். இப்போதும், தேவையான அளவு MOP உரம் மற்றும் யூரியா உரம் 25,000 மெற்றிக் டொன் அரசாங்கத்தின் உரக் கூட்டுத் தாபனங்களின் வசம் உள்ளது. மேலும் 25,000 மெற்றிக் டொன் யூரியா

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla

CamScanner
CamScanner

	உரத்தை கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 36,000 மெற்றிக் டொன் டிரிபிள் சூப்பர் பொசுபேற்று (TSP) உரம் மார்ச் மாதத்தில் சர்வதேச அபிவிருத்திற்கான ஐக்கிய நாடுகள் முகவர்நிலையம் (USAID) மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய முறைமை (FAO) ஆகியவற்றின் உதவியின் கீழ் இலவசமாக கிடைக்கவுள்ளது. இதற்கு மேலதிகமாக, பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின் வெற்றி தொடர்பான பின்வரும் விடயங்களையும் நிறைவேற்றுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். **அனைத்து விவசாய நடவடிக்கைகளுக்கும் கிளைபோசைட்டு களைக்கொல்லியை பயன்படுத்த அனுமதி அளித்தல்** • ஒருங்கிணைந்த 2 வகைப்பாடு குறியீடுகளின் (HS Codes) கீழ் இலங்கையில் கிளைபோசேட்டு இறக்குமதி செய்வதற்கான தடை நீக்கப்பட்டது. • அனுமதிப் பத்திரம் பெற்ற ஒரு உற்பத்தியாகவும், தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கையில் களைகளை கட்டுப்படுத்த தேவையான ஒரு களைநாசினியாகவும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் வேண்டுகோளின் பிரகாரம் 2018.10.02 ஆம் திகதிய 2091/13-2018 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மட்டுப்பட்டளவான பாவனையின் கீழ் **பொலிஒக்சிஎதலீன் ஏமைன் (POEA) என்ற உதவியற்ற** க்ளைபோசைட்டின் பாவனைக்கும் இறக்குமதிக்கும் அனுமதி வழங்கப்பட்டது. • நாட்டில் உணவுப் பாதுகாப்பை உருவாக்குவதும், விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்துவதும் அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாக இருந்த இந்த நேரத்தில், தேயிலை மற்றும் இறப்பர் ஆகிய பயிர்களுக்கு மட்டும் POEA இல்லாத கிளைபோசைட்டு, களைக்கொல்லி தொழில்நுட்ப பரிந்துரைகளுக்கு இணங்க பாவிக்கப்படுகின்றது. விவசாயத் திணைக்களம் களைகளை இலகுவாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஏனைய அனைத்துப் பயிர்களிலும் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் என 2022.11.17 ஆம் திகதி கிருமிநாசினிகள் கட்டுப்பாட்டுப் பதிவாளர் வெளியிட்டுள்ள வர்த்தமானி இலக்கம் 2306/49 முறையான ஒழுங்குமுறை கட்டமைப்பிற்கு உட்பட்டு **கிளைபோசேட்டை** இறக்குமதி செய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் அனுமதியளித்துள்ளது.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

CamScanner

CamScanner

- இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் மற்றும் கிருமிநாசினிகள் கட்டுப்பாட்டுப் பதிவாளரின் திணைக்களம் ஆகியவற்றின் கீழ் பதிவு செய்துள்ள தனியார் துறை கிருமிநாசினி இறக்குமதியாளர்களுக்கு கிளைபோசைட்டை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு தற்போது இந்த களைக்கொல்லிகள் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன.

உணவுப் பாதுகாப்பையும் வாழ்வாதாரத்தையும் மீளக்கட்டியெழுப்புவதற்கான கூட்டொத்துழைப்பும் கடன் உதவியும்

Support for Framers என்ற கருத் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கிய நிதி ஒதுக்கீட்டின் மூலம், பெரும்போகத்தில் நிலங்கள் பன்படுத்தலை ஆரம்பித்துள்ள விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேயருக்கு ரூ.10,000.00 வீதம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் 1,055,209 விவசாயிகளுக்கு ரூ. 7,475,844,611.00 தொகையான நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

- மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியானது இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் கிராமிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் ஊடாக விவசாயிகளுக்கு வட்டியில்லா சலுகைக் கொடுப்பனவுகளின் அடிப்படையில் கடன்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்தியாவசிய கிரமிநாசினிகளை இறக்குமதி செய்வதற்கு இருக்கின்ற தடைகளை நீக்குதல்

- 2021 ஆம் ஆண்டில், "விஷமற்ற உணவு" மீதான குடிமக்களின் உரிமையை உறுதிசெய்யும் நோக்கத்துடன் 2021-06-05 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி இலக்கம் 2226/48 மூலம் பூச்சிக்கொல்லிகளின் இறக்குமதி தடை செய்யப்பட்டது.

- அதன் பின்னர் மீண்டும் 2021.11.30 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி இலக்கம் 2256/23 மூலம் நிவாரண முறையின் கீழ் பூச்சிக்கொல்லிகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- தற்போது, நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அதிக விளைச்சல்களை பெறவும், பூச்சிகளின் அச்சுறுத்தல்களை அடக்கவும், எளிதாக பயிர்களுக்கு தேவையான பூச்சிக்கொல்லி மருந்துகளை இறக்குமதி செய்யவும், நிவாரண முறையும் நீக்கப்பட்டு, பூச்சிநாசினிகள் கட்டுப்பாட்டுப் பதிவாளரின் ஊடாக தேவையான பூச்சிக்கொல்லிகளை இலகுவாக இறக்குமதி செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

Gunadasa Samaradiwakara
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

CamScanner

	• அதன்படி, 2023 01.01 ஆம் திகதிற்கு 496,356 கிலோ லீற்றர் பூச்சிக்கொல்லிகளும், 518,065 கிலோ லீற்றர் பூஞ்சைக் கொல்லிகளும், 798,339 கிலோ லீற்றர் களைக்கொல்லிகளும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த அளவு 2023 ஆம் ஆண்டு சிறுபோகத்திற்கு பருவத்திற்குப் போதுமானதாக இருக்கும்.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

CamScanner

CamScanner

04. கரிம உரத்தின் தரமும் விநியோகத் தரப்புகளுக்கு செலுத்தப்படும் தொகையும்
விவசாயிகளுக்கு சிறுபோகத்திற்கு வழங்கப்படும் சேதன உரங்கள் தரமற்றவை என குழு தெரிவித்துள்ளது. மேலும் ஒரு கிலோ கரிம உரத்திற்காக விநியோகத் தரப்புகளுக்கு செலுத்தும் தொகையிலும் குழு தனது கவனத்தை செலுத்தியது.

கரிம உரங்கள் அவற்றில் உள்ள நைட்ரஜன் உள்ளடக்கத்திற்கு ஏற்ப பணம் செலுத்தப்படுகின்றது. பி.வ.அ./வ.அ. ஒரு கிராமுக்கு ஆகக்குறைந்த தொகையாக 41 ரூபாய் செலுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டார். **சிபாரிசுகள்** தற்போதைய சூழ்நிலையில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் மக்கள் மத்தியில் அதிக ஆர்வம் காணப்படுவதால், அதற்குத் தேவையான **விதைகளையும் தரமான உரங்களையும்** வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்தல். பல்வேறு நிறுவனங்களும் இந்த நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருவதால், அந்த நிறுவனங்களுக்கான பதிவு செய்யும் வேலைத் திட்டம் அமைச்சினுள் தயாரித்தல்.	❖ கரிம உரங்களுக்கான தரம் இலங்கை நியமங்கள் கட்டளைகள் நிறுவகத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது **(பின்னிணைப்பு இலக்கம் 01).** அமைச்சரவை நியமிக்கும் கொள்வனவு பற்றிய நிலையியல் குழுவும் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் இணைந்து சமர்ப்பித்த 2022-02-23 திகதிய கூட்டத்தின் கூட்ட அறிக்கையின்படி, 2022 சிறுபோகத்திற்கு கரிம உரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. 01 கிலோ கிராமுக்கு விநியோகத் தரப்புகளுக்கு வழங்கப்படும் விலை, அந்த தயாரிப்பில் உள்ள நைட்ரஜனின் சதவீதத்திற்கு ஏற்ப நிர்ணயிக்கப்படுகின்றது. அதன்படி, மேற்கூறிய அமைச்சரவை நியமித்த கொள்வனவு பற்றிய நிலையியல் அறிக்கையின் 03 விடயத்தின் **(பின்னிணைப்பு இலக்கம் 02)** 01 கிலோ கிராம் கரிம உரத்திற்கான விலை பின்வருமாறு தீர்மானிக்கப்படுகின்றது.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

Gunadasa Samarasi...
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

CamScanner
CamScanner

உணவு நெருக்கடிக்கு குறுகிய கால நீர்வாக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பி.வ.அ. குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு நுகர்வுக்குப் போதாது என மதிப்பிடப்பட்டுள்ள அரிசியின் அளவை இறக்குமதி செய்யுமாறு வர்த்தக அமைச்சுக்கு அறிவித்தல்.

"ஒன்றிணைவோம் - நாட்டை வெற்றிபெறச்செய்வோம்" என்ற தொணிப்பொருளில் ஒரு பயிர்ச்செய்கை செயல்நடவடிக்கையை முன்னெடுத்தல்.

உர வகை	நைதரசன் விகிதம் (N %)	சராசரிப் பெறுமானம் (இரூ)	ஏற்றியிறக்கல் மற்றும் நிருவாக செலவு (இரூ)	ஏற்றியிறக்கல் மற்றும் நிருவாக செலவு அடங்கலாக நிர்ணயித்த அலகு விலை (இரூ)
கொம்போஸ்ட்டு உரம்	1.5 - 2.5	33.71	8	41
	2.6 - 3.5	43.3		51
	3.6 - 4.5	53		61
	4.6 - 5.5	63		71
	5.6 - 6.5	73		81
	6.6 - 7.5	83		91

மேற்கூறிய தீர்மானங்கள் அடங்கிய 2022-03-09 ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்திற்கு 2022-03-16 அன்று அங்கீகாரம் கிடைத்துள்ளமையையும் குறிப்பிடுகிறேன்.

❖ **தரமான விதைகளை விநியோகித்தல்**

மேலும், 2022/23 பெரும்போகத்தில் விதை கிடைப்பதை உறுதி செய்வதற்காக விவசாயத் திணைக்களம் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

1. மரக்கறி விதைகளை விநியோகித்தல்

1. வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுவதற்கு 2.5 மில்லியன் விதைப் பொதிகளை விநியோகித்தல்.
II. மரக்கறி அடிப்படை விதைகளை விநியோகித்தல்.

நாட்டில் உள்ள ஒக்ரா, பட்டோலா, பாக்கு, மேகரல், முள்ளங்கி, தக்காளி, மீன் மிளகாய், பீர்க்கங்காய், வெள்ளரிக்காய், கத்தரிக்காய், போஞ்சி முதலிய பயிர்களின் சான்றுபடுத்திய விதை உற்பத்திக்குத் தேவையான முழுமையான அடிப்படை விதைகளை விவசாயத் திணைக்களம் வழங்குகின்றது. வழங்கப்பட்ட அடிப்படை விதைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு:

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.60/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

CamScanner

பயிர்	விநியோகித்த அடிப்படை விதைகள் அளவு (கிகி)	எதிர்பார்த்த விதைகள் விளைச்சல் (கிகி)
வெண்டிக்காய்	154.3	21383
புடோலங்காய்	67	7313
பாகற்காய்	7.3	450
மேகரல்	198.75	7636
ராபு	45	6567
தக்காளி	1.53	270.85
கறி மிளகாய்	2.6	412.5
பீர்க்கங்காய்	30	2820
தேமிரிக்காய்	1.6	554
போஞ்சி	25	500
கத்தரிக்காய்	0.1	50

III, சான்றுபடுத்திய மரக்கறி விதைகளை விநியோகித்தல்

பயிர்	பயிரிடப்படும் அளவு (ஹெக்.)	தேவையான விதைகளின் அளவு (மெ.டொ.)	விவசாயத் திணைக்களம் விநியோகித்த அளவு (மெ.டொ.)	வி.தி. விநியோகித்த அளவு தேசிய தேவையின் விகிதமாக
வெண்டிக்காய்	4400	19.8	1790.7	9.04%
புடோலங்காய்	1400	5.6	357.9	6.39%
பாகற்காய்	2500	15	441.5	2.94%
மேகரல்	4500	90	2601.7	2.89%
ராபு	1800	9	456.1	5.07%
தக்காளி	3600	1.08	185.2	17.15%
கறி மிளகாய்	2100	2.1	79.1	3.77%
பீர்க்கங்காய்	3000	9	66.5	0.74%
தேமிரிக்காய்	2000	2	126.8	6.34%
போஞ்சி	4500	225	4415.2	1.96%
கத்தரிக்காய்	6150	1.525	140	9.18%

விதை நெல்லை விநியோகித்தல்

- 2022/23 பெரும்போகத்திற்கு சான்றுபடுத்திய 1,981,660 புசல் விதை நெல்லை (இந்தப் பயிர்ச் செய்கை போகத்தின் விதை நெல் தேவையின் 79.26%) உற்பத்தி செய்ய தேவையான பதிவு

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Agriculture
...80/5, "Govijana Mandiraya",
...lwatta Avenue, Battaramulla.

CamScanner
CamScanner

செய்யப்பட்டுள்ள 49,541.5 விதை நெல் 2022 சிறுபோகத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

- 2022/23 பெரும்போகத்திற்கு 14,292 புசல் விதை நெல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மேலதிக உணவுப் பயிர் விதைகளை விநியோகித்தல்

- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சான்றுபடுத்திய அடிப்படை விதைகளுக்கான முழு அடிப்படை விதைத் தேவையும் விவசாயத் திணைக்களம் வழங்கும் அடிப்படை விதைகளால் பூர்த்தி செய்யப்படுகின்றது.
- விவசாயத் திணைக்களத்தால் நேரடியாக வழங்கப்படும் சான்றுபடுத்திய விதை அளவுகள் பின்வருமாறு.

பயிர் மேலதிக உணவுப் பயிர்	பயிரிடப்படும் அளவு (ஹெக்.)	தேவையான விதைகளின் அளவு (மெ.டொ.)	விவசாயத் திணைக்களம் விநியோகித்த அளவு (மெ.டொ.)	வி.தி. விநியோகித்த அளவு தேசிய தேவையின் விகிதமாக
பயறு	17000	425	139600	32.85%
உழுந்து	15000	375	134425	35.85%
கவ்பி	11000	385	35685	9.27%
நிலக்கடலை	12000	1200	106624	8.89%
சோயா	300	15	24438	100%
குரக்கன்	4800	34	5892	17.33%
எள்ளு	3250	23	4237	18.42%
சோளம் (திறந்தவெளி மகரந்த சேர்க்கை)	1700	34	49519.95	100%
சோளம் (கலப்பினம்)	83300	1250	12101.85	0.97%
மிளகாய் (திறந்தவெளி மகரந்த சேர்க்கை)	5000	5	783.311	15.67%
மிளகாய் (கலப்பினம்)	5000	2.5	197.191	7.89%

" ஒன்றாகப் பயிர்ச்செய்வோம் நாட்டை வெற்றிபெறச்செய்வோம்" என்ற தொணிப்பொருளில் ஒரு துரித பயிர்ச்செய்கை செயல்திட்டத்தை முன்னெடுக்கும் பொருட்டு கீழ்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. பயிரிடப்படாத நிலங்களைக் கண்டறிந்து பயிர்ச் செய்கைக்கு வழிகாட்டுதல், கிராம அளவில் ஐந்து அலுவலர்கள் கொண்ட குழு மூலம் வீடு வீடாகச் சென்று தோட்டக்கலையை ஊக்குவிக்கும் வகையில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், இயற்கை உரங்கள் உற்பத்திக்குத் தேவையான

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Pa...

CamScanner

	மானியங்களை வழங்குதல், விவசாய விரிவாக்க சேவை மூலம் அதற்கான தொழில்நுட்ப அறிவை வழங்குதல், வன விலங்குகளின் சேதத்தை குறைக்க சில உத்திகளை அறிமுகப்படுத்துதல், விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகை மூலப்பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் மூலம் தேவையான அடிப்படை விதைகளை உற்பத்தி செய்து விதைத் தேவையை உறுதிப்படுத்துதல். 2. நெல் அடங்கலாக 12 மேலதிக உணவுப் பயிர்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ள 1 இல் குறிப்பிட்ட சில வழிமுறைகளைப் பின்பற்றியதன் மூலம், நிலக்கடலை, எள்ளு, உழுந்து மற்றும் கவ்பி போன்ற பயிர்கள் தன்னிறைவு பூர்த்தியை நெருங்கின. முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், இறக்குமதியின் அளவும் செலவும் மிகவும் குறைவாகவே இருந்தது. 04 வகைப் பயிர்கள் தொடர்பாக 05 வருடங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பற்றிய தரவுகள் **பின்னிணைப்பு 03** தரப்பட்டுள்ளன. 3. தரமான கரிம உரங்களை உற்பத்தி செய்வதற்கான முறை மாதிரிகள், கள நாட்கள், விவசாயிகளுக்கு பயிற்சியளித்தல், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், அதன் மூலம் தரப்படுத்தப்பட்ட கரிம உரங்கள் உற்பத்தி, பாரியளவான மற்றும் நடுத்தர அளவான கரிம உர உற்பத்தியாளர்களுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுத்தல் மற்றும் இயந்திரங்களை வழங்குதல், அர்ப்பணிப்புள்ள நிலையான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களால் புதிய கரிம உரங்கள் உற்பத்தி செய்தல், உரங்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் முதலிய அம்சங்களில் விரிவாக்கத் துறைக்கு பங்களித்தல். 4. இரசாயன உரங்களின் விதைகளை இலவசமாக வழங்குவதன் மூலம் (சோளம் போன்றவை) விவசாய விரிவாக்க முறையை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளின் விரிவாக்கத்தின் மூலம் அதிக பரப்பளவில் பயிர்களை வளர்க்க விவசாயிகளை ஊக்குவிக்க முடியுமாகவிருத்தல்.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla

CamScanner
CamScanner

05. பயிர்ச்செய்கையின் நிமித்தம் அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளை பெற்றுக் கொடுத்தல்	
அரசாங்கத்திற்கு சொந்தமான பயிரிடப்படாத, வனசீவராசிகள் மற்றும் வனங்கள் அல்லாத நீர்ப்பாசன வசதிகள் அடங்கலாக மக்களுக்கு பயிர்ச்செய்கையின் நிமித்தம் வழங்க எதிர்பார்ப்பதாக பி.வ.அ. குறிப்பிட்டார். சிபாரிசுகள் பயிரிடுவதற்கான காணிகளை பெற்றுக்கொடுக்கும் போது தனிநபர்களுக்கு அல்லாமல், கிராமிய குழுக்களுக்கு/பிராந்திய குழுக்களுக்கு ஏற்ப நிலங்களை வழங்குவது பொருத்தமானது தென் அதிவேக வீதியின் இரு ஓரங்களிலும் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை மரவள்ளிக்கிழங்கு, வற்றாளைக்கிழங்கு மற்றும் கஹல முதலிய பயிர்களை பயிரிடுவதற்கு பயன்படுத்தல் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை சரியான காலத்திற்கும் திட்டத்திற்கும் இணங்க சீரமைத்தல் மற்றும் பின்தொடர்தல்	" பயிர்ச்செய்கையின் நிமித்தம் அரசாங்கத்திற்கு சொந்தமான நிலங்களை பெற்றுக் கொடுத்தல்" என்ற தொணிப்பொருளின் கீழ் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக கீழ்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விவசாயத் திணைக்களம் அரச நிறுவனங்களுக்கு சொந்தமான பயிரிடப்படாத நிலங்களைக் கண்டறிந்து, அந்தந்த நிலங்களின் தன்மை மற்றும் நிலம் உள்ள பகுதிகளுக்கு ஏற்ப பொருத்தமான பயிர்கள் மற்றும் பயிர்ச் செய்கை முறைகளை அறிமுகப்படுத்துவதற்கான தொழில் நுட்ப ஆதரவை பொருத்தமான நிறுவனங்களின் மூலம் வழங்கும். இது தொடர்பான பொறுப்புகளை வகிக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தற்போது சப்ரகமுவ, மேற்கு, ஊவா போன்ற மாகாணங்களில் தேவையான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன், தேவையான தொழில் நுட்பம் மற்றும் நடவுப் பொருட்களை வழங்குவதற்கு விவசாயத் திணைக்களத்தின் விவசாய விரிவாக்க சேவையை தீவிரமாக ஈடுபடுத்துவதற்கான திட்டங்களையும் தயாரித்துள்ளன. ❖ **புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துதல்** புகையிரத ஒதுக்கப்பகுதி நிலத்தை தற்காலிகமாக பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்துவது பற்றி அந்தந்த மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. வடக்கு தொடருந்து நிர்மாணப்பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் புகையிரத காப்புக்காடுகளில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என அனுராதபுர மாவட்ட செயலாளர் அமைச்சுக்கு அறிவித்துள்ளார். புகையிர ஒதுக்கப் பகுதி காணியை தற்காலிக பயிர் செய்கைக்காக குறுகிய கால குத்தகைக்கு வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் எவரும் பதிலளிக்கவில்லை என இரத்தினபுரி மாவட்ட செயலாளர் அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

CamScanner
CamScanner

	புத்தளம் மாவட்டத்தில் உள்ள புகையிரத ஒதுக்கப் பகுதி காணியை பயிர்ச் செய்கைக்கு வழங்குவது தொடர்பாக 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் 03 கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், மூன்று கோரிக்கைகளும் புகையிரத திணைக்களத்தின் மாவட்ட பொறியாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் புத்தளம் மாவட்ட செயலாளர் அமைச்சுக்கு அறிவித்துள்ளார். குருநாகல் மாவட்டத்தில் பயிர்ச் செய்கைக்கு புகையிரத ஒதுக்கப் பகுதி காணிகளை வழங்குவது தொடர்பாக 2023 ஆம் ஆண்டு சனவரி மாதமளவில் 108 கோரிக்கைகள் கிடைத்துள்ளதாகவும், அவற்றில் 70கோரிக்கைகள் புகையிரதத் திணைக்களத்தின் மாவட்ட பொறியாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் குருநாகல் மாவட்ட செயலாளர் அமைச்சுக்கு அறிவித்துள்ளார். அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர் தற்காலிக பயிர்ச் செய்கைக்காக தனது மாவட்டத்தில் குறுகிய கால குத்தகைக்கு வழங்குவதற்கு புகையிரத ஒதுக்கப் பகுதி காணிகள் எதுவும் இல்லை என அமைச்சுக்கு அறிவித்துள்ளார். ஏற்கனவே 2337ஏக்கர் காணிகளில் நெல், சோளம், வெண்டிக்காய், நிலக்கடலை, கவ்பி, உழுந்து, மரவள்ளிக்கிழங்கு முதலிய பயிர்கள் பயிர் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட செயலாளர் அமைச்சுக்கு அறிவித்துள்ளார். பொலன்னறுவை மாவட்டத்தில் தற்போதும் புகையிரத ஒதுக்கப் பகுதி காணிகளில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அந்தக் காணிகளைத் தவிர விவசாயம் செய்யக் கூடிய வேறு காணிகள் இல்லை என பொலன்னறுவை மாவட்ட செயலாளர் அமைச்சுக்கு அறிவித்துள்ளார். கேகாலை மாவட்டத்தின் ரம்புக்கன பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரமே பயிர்ச் செய்கைக்கு ஏற்ற புகையிரத ஒதுக்கப் பகுதி காணிகள் உள்ளதால் குறித்த காணிகளில் பயிர்ச் செய்கைக்காக 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் 32 கோரிக்கைகள் அந்தந்த உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கேகாலை மாவட்ட செயலாளர் அமைச்சுக்கு அறிவித்துள்ளார். கம்பஹா மாவட்டத்தில் பயிர்ச் செய்கைக்காக புகையிரத ஒதுக்கப் பகுதி காணிகளை வழங்குவது தொடர்பாக 2023 ஆம் ஆண்டு சனவரி மாதமளவில் 25 கோரிக்கைகள் கிடைத்துள்ளதாகவும், 23 கோரிக்கைகள் புகையிரதத் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கம்பஹா மாவட்ட செயலாளர் அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

CamScanner

55 ஏக்கர் புகையிரத ஒதுக்கப் பருதி காணியில் 9.2375 ஏக்கரில் மரக்கறி பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட செயலாளர் அமைச்சுக்கு அறிவித்துள்ளார். இதன் மூலம் 27 பேர் பயனடைவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **தென் அதிவேக வீதி இரு ஓரங்களிலும் காணப்படும் ஆயிரக்கணக்கான ஒதுக்கக் காணிகளை பயிர்ச்செய்கையின் நிமித்தம் பயன்படுத்துதல்**

இது குறித்து, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிடம் வினவப்பட்டது.

- 06 வழிச்சாலையுடன் கூடிய தெற்கு அதிவேக வீதியை அமைப்பதற்காக சுவீகரிக்கப்பட்ட ஒதுக்கப் பகுதி நிலத்தில் மரவள்ளிக்கிழங்கு, சேனைக்கிழங்கு, கஹலா போன்ற விலங்குகள் உண்ணும் பயிர்கள் பயிரிட்டுள்ளதால் விலங்குகள் நெடுஞ்சாலை எல்லைக்குள் வரும் அபாயம் உள்ளது.

- அதிவேக வீதியின் இருபுறமும் மனித நுகர்வுக்கு ஏற்ற பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதால், அதிவேக வீதி கண்ணி வேலிக்கும் மற்றும் அதிவேக வீதி சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்படுவது மட்டுமன்றி, வீதியில் அனுமதியின்றி மனிதர்கள் நுழையும் அபாயமும் உள்ளது.

பின்வரும் உண்மைகள் காரணமாக வீதிப் பாதுகாப்பிற்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், இந்தப் பணியை செய்வதற்கு சட்டப்பூர்வ தகுதி இல்லை என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
අංක.80/5,"ගොවිජන මන්දිරය",
රජමල්වත්ත පටුමග, බත්තරමුල්ල.

CamScanner
CamScanner

06. கோதுமை மாவு பற்றாக்குறைக்கான மாற்றுவழி கோதுமை மாவுக்கு பற்றாக்குறை ஏற்பட்டால் அரிசிக்கு நிலவும் கேள்வி அதிகரிக்கலாம் என்பதால் அதற்கான மாற்றுவழியை கண்டுகொள்ளல்	
அரிசி பற்றாக்குறைக்கான உரிய அளவு அரிசியை இறக்குமதி செய்வதை வர்த்தக அமைச்சு திட்டமிட்டவாறு மேற்கொள்ளும் எனவும், கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால், மரவள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்கு போன்ற பயிர்களின் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் பி.வ.அ. தெரிவித்தார்.	கோதுமை மாவுக்கு மாற்றாக மரவள்ளிக்கிழங்கு மற்றும் உருளைக்கிழங்கு போன்ற பயிர்களை ஊக்குவிக்க பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1. "ஒன்றாக வளர்ப்போம் - நாட்டை வெற்றிபெறச்செய்வோம்" உணவுப் பயிர்கள் உற்பத்தி தேசிய பிரச்சார நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் - 2022 பொது நிர்வாக அமைச்சின் தலையீட்டுடன் நிறுவன மட்டத்திலும் கிராமக் குழு மட்டத்திலும் நடவு திரவப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல். 2. கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சில விவசாய தொழில் நுட்பங்களை (அரிசி மூட்டை இனிப்பு உருளைக்கிழங்கு பயிர் செய்கை போன்ற புதிய தொழில் நுட்பங்கள்) விவசாயிகளுக்கு முறைகள் மூலம் செயல்படுத்துதல். 2. அதிக விளைச்சலை தரும் மற்றும் தரமான இனங்களை வெளியிடுதல் மற்றும் அந்த இனங்களை பிரபலப்படுத்துதல்.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue, Battaramulla

Gunadasa Samara...
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue, Battaramulla

CamScanner
CamScanner

07. பொதுமக்களை விழிப்பூட்டுதல்	
சிபாரிசுகள் கமத்தொழில் அமைச்சின் மீதிருந்த மக்களின் நம்பிக்கை உடைந்துள்ளதால், இந்த நெருக்கடியான நேரத்தில் அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் பற்றி பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை அல்லது ஊடகங்கள் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்துதல்.	இது சம்பந்தமாக, விவசாயத் திணைக்களம் வானொலி, தொலைக்காட்சி, 1920 விவசாய ஆலோசனை சேவை, வரைகலை தொடர்பு, தகவல் தொழில் நுட்ப கருவிகள் (முகநூல், யூ, டியூப் போன்றவை) மற்றும் விவசாய தொழில் நுட்ப பூங்காக்களை பராமரித்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. மேலும், விவசாயத் திணைக்களத்தினால் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டம் **பின்னிணைப்பு 04** இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla

CamScanner
CamScanner

08. பெரும்போகத்திற்கான விதை நெல்
பெரும்போகத்திற்கு தேவையான விதை நெல்லின் அளவை பெற்றுக் கொள்ளல்

மொத்த பயிர்ச் செய்கை அளவின்படி பரப்பளவுக்கு ஏற்ப, ஒரு பயிர்ச் செய்கை போகத்திற்கு சுமார் 40 இலட்சம் புஷல் விதை நெல் தேவைப்பட்டால், நெற் பயிர்ச் செய்கையில், 04 ஆண்டுகளுக்கு ஒரு முறை விதைகளை மாற்றுவது போதும் என்பதால் மொத்த பயிர்ச் செய்கைப் பரப்பில் 25% வீதத்திற்கு மட்டுமே விதை நெல்லை வழங்க வேண்டும் என பி.வ.அ. குறிப்பிட்டார். அதன்படி, பெரும்போகத்திற்கு 10 இலட்சம் புசல் விதை நெல் தேவை எனவும், விவசாயத் திணைக்களத்திடம் 80,000 புசல்கள் உள்ளதாகவும், மீதமுள்ள தொகை மற்ற தரப்பினரிடம் இருந்து கிடைக்கும் எனவும் குறிப்பிட்டார். **<u>சிபாரிசுகள்</u>** கமநல சேவை நிலையங்களின்படி பெரும்போகத்திற்கு விதை நெல்லை விநியோகிக்கும் முறையை ஒரு மாதத்திற்குள் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பி.வ.அ. இற்கு சிபாரிசு செய்தல்.	பெரும்போகத்திற்கு தேவையான அளவு விதை நெல்லை கொள்வனவு செய்ய பின்வரும் நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. 1. சான்றுபடுத்திய விதை நெல்லை உற்பத்திக்குத் தேவையான அடிப்படை விதை நெல்லை அரசு மற்றும் தனியார் துறைகளுக்கு வழங்குதல். 2. ஒப்பந்த அடிப்படையிலான விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் 3. சுய நெல் விதை உற்பத்திற்கு தேவையான அடிப்படை விதைகளை விநியோகித்தல் 4. பயிர்களை பதிவு செய்து விதைகளை சான்றுபடுத்துதல் 5. விதை உற்பத்தி தொழில் நுட்பங்களை பெற்றுக் கொடுத்தல் 2022/23 பெரும்போகத்தில், விதை மற்றும் நடவுப் பொருள் நிலையம், மாகாணங்களுக்கு இடையேயான விரிவாக்கப் பகுதிகள், மாகாண விவசாயப் பகுதிகள், மகாவலி பண்ணைகள் மற்றும் மகாவலி பகுதிகளில் உள்ள விவசாயிகளின் மூலம் சுமார் 275,000 புசல்கள் சான்றுபடுத்திய விதை நெல்லை உற்பத்தி செய்துள்ளது. தனியார் துறை தனது தர உறுதி முறையின் கீழ் பிரிவால் உற்பத்தி செய்து விநியோகித்துள்ளது. அதன்படி, 2022/23 பெரும்போகத்திற்கு சுமார் 1,000,000 புசல்கள் தர சான்றளிக்கப்பட்ட விதை நெல் விநியோகிக்கப்பட்டுள்ளது **(பின்னிணைப்பு 05)**.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla

Gunadasa Samarasin
Secretary
Ministry of Agriculture
"Govijana Mandiraya",
Avenue, Battaramulla

CamScanner
CamScanner

09. விதைகளை இறக்குமதி செய்வதற்கு தேவையான நிதிகளை பெற்றுக் கொள்ளல்	
சுமார் 10 மில்லியன் டொலர்கள் தேவைப்படும் கலப்பின விதைகளை இறக்குமதி செய்வதற்கான ஆதரவை வழங்குமாறு கமத்தொழில் அமைச்சின் பி.வ.அ. குழுவிடம் கேட்டுக் கொண்டார். **சிபாரிசுகள்** இது மிகவும் இன்றியமையாத விடயமாக இருப்பதால், இந்தக் குழுவின் பரிந்துரையின் பேரில் முன்னுரிமை அடிப்படையில் இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெறுவதற்கு நிறைசேரியின் செயலாளரிடம் கோரிக்கையை சமர்ப்பிக்குமாறு பி.வ.அ. இற்கு குழு உத்தரவிட்டது.	கலப்பின விதைகளை இறக்குமதி செய்வதற்கு சுமார் 10 மில்லியன் டொலர்கள் தேவைப்படுவதாகவும், அந்தத் தொகையைப் பெறுவதற்கு ஆதரவை வழங்குமாறு கமத்தொழில் அமைச்சின் பி.வ.அ. குழுவிடம் கேட்டுக் கொண்டார். • 2022 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில், நாட்டில் டொலர் நெருக்கடி விவசாயத் துறையில் இறக்குமதி செய்யப்பட்ட விதைகள் மற்றும் நடவுப் பொருட்களிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. • இதன் விளைவாக விதைகள் மற்றும் நடவுப் பொருட்கள் சங்கத்தின் தனியார் நிறுவனங்களுக்கு கலப்பின விதைகளை இறக்குமதி செய்வதற்கு மத்திய வங்கியின் ஊடாக ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு 10 மில்லியன் டொலர்களை விவசாய அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார். • இதன்படி, டொலர் நெருக்கடியின் இக்கட்டான நேரத்தில் விதைகள் மற்றும் நடவுப் பொருட்களின் இறக்குமதியாளர்களுக்கு கிட்டத்தட்ட 5 மில்லியன் டொலர்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. • மேலும், விதை மற்றும் நடவுப் பொருள்கள் சங்கம் மீண்டும் கிட்டத்தட்ட 5 மில்லியன் நிதி ஒதுக்கீடுகளைக் கோரியது, ஆனால் டொலர் பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டது. எனவே அந்தத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை.

H.K.A. Ranjith Udayasiri
Chief Finance Officer
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

CamScanner

CamScanner

අමුණුම 01

Quality Standard for organic fertilizer

අමුණුම	01
மேலதிகம்	01
Annexure	01

1. Standard for compost (SLS 1635:2019, UDC 628.477.3)

General requirements

Colour

The colour of the material shall be brown, grey or dark black.

Keeping properties

The material shall comply with the requirements specified in this standard, after storage in packages/containers as prescribed in clause 6 at room temperature for not less than12 months from the date of production.

Moisture content

The material shall not contain more than 25 per cent of moisture by dry mass, when tested as prescribed in **SLS 645 ; Part 2.**

Odor

The material shall be free from any foul odor.

Texture

The texture of the material shall be friable when moist.

Physical Requirements

The product shall also comply with the physical requirements given in Table 1 when tested in accordance with the relevant methods given in Column 4 of the table.

TABLE 1 - Physical Requirements

Sl No. (1)	Characteristics (2)	Requirement (3)	Method of test (4)
i)	pH	6.5 – 8.5	SLS 1526: 2016
ii)	Conductivity,dsm *max.*	4.0	Appendix B
iii)	Foreign matter	Free from visible non biodegradable materials except sand	Appendix H
iv)	Sand content percent by		

CamScanner

	mass on dry basis, max	20	Appendix E
v)	Particle size; Residue particles when passing through 4 mm sieve, percent by mass, max.	2	Appendix G

Chemical Requirements

The product shall comply with the chemical requirements given in Table 1 when tested in accordance with the relevant methods given in Column 4 of the table.

TABLE 2- Chemical Requirements

Sl No.	Characteristics	Requirement	Method of test
(1)	(2)	(3)	(4)
i)	Total Nitrogen content as N , per cent by dry mass, min.	1.0	SLS 645: Part 1
ii)	Total Phosphate content as P_2O_5 per cent by dry mass, min.	0.5	SLS 645: Part 5
iii)	Total Potassium content as K_2O as per cent, by dry mass, min.	1.0	SLS 645 :Part 4
iv)	Total Magnesium content, as MgO per cent by dry mass, min.	0.5	SLS 645: Part 6
v)	Total Calcium content, as CaO per cent by dry mass, min.	0.7	SLS 645: part 6
vi)	Organic Carbon ,as C per cent, by dry mass, min.	20	Appendix C
vii)	C:N ratio	10-25	Appendix D

CamScanner

CamScanner

Microbiological requirements

The material shall comply with the microbiological limits as prescribed in Table 3 when tested in accordance with the relevant methods given in Column 4 of the table.

TABLE 3 – Microbiological Requirements

Sl. No. (1)	Characteristic (2)	Requirement (3)	Method of test (4)
i)	Faecal coli forms colonies (MPN)/ g on dry weight basis,	Free	SLS 516 : Part 3
ii)	Salmonella per (MPN)/ 25 g on dry weight basis	Free	SLS 516 : Part 5

Limits for potentially toxic elements

The product shall not exceed the limits for potentially toxic elements given in Table 4.

TABLE 4 – Limits for potentially toxic elements

Sl. No. (1)	Potentially toxic element (2)	Requirement (3)	Method of test (4)
i)	Cadmium content, mg/kg dry weight, max.	3	2.6.35 AOAC Method 2006
ii)	Chromium content, mg/kg dry weight, max.	50	
iii)	Lead content, mg/kg dry weight, max.	50	
iv)	Mercury content, mg/kg dry weight, max.	0 5	
v)	Nickel content, mg/kg dry weight, max.	50	
vi)	Arsenic content, mg/kg dry weight, max.	3	

Biological Requirements

The material shall not contain more than 16 viable seeds per square meter when tested with methods prescribed in Appendix F.

CamScanner

PACKAGING

Compost shall be packed in sound and strong packages or containers. If polypropylene /woven or not, bags with an inner lining of low density polyethylene having a minimum thickness 50 µm or any other material with barrier properties superior (High Density Polyethylene) or equal to low density polyethylene of 50 µm thickness to afford maximum protection from normal hazard of transportation and handling. While those weighing 5 kg or less shall, be packed in polyethylene bag with a suitable thickness suitable packages include polypropylene, bags of mass 5-50 kg.

NOTE : *The material may also be supplied in bulk containers as agreed between the purchaser and the supplier.*

MARKING AND LABELLING

The bags shall legibly and indelibly marked with the following information and shall comply with Fertilizer Act and regulations in Sri Lanka.

The bags shall legibly and indelibly mark with the following information:

a. Name and type of the product;
b. Name and address of the manufacturer, including country of origin;
c. Brand name and/or trade mark, if any;
d. Date of manufacture ;
e. Net mass in kilograms
f. Instructions for storage and use;
g. Date of Expiry;
h. Batch No;
J Total Nitrogen to total dry mass in percent by mass;
k Total Phosphorus (P_2O) to total dry mass; percent by mass
l Total Potassium (k_2O) to total dry mass percent by mass;
m Total Organic Carbon (C) to total dry mass percent by mass ;
n C:N ratio; and
o The statement "Use no hooks".

CamScanner

Standard for liquid organic fertilizer

Chemical and physical requirements

The product shall conform to the requirements given in Table 1, when tested according to the methods given in Column 4 of the Table 1.

TABLE 1 – Chemical and physical requirements for liquid organic fertilizers

Sl No. (1)	Characteristic (2)	Requirement (3)	Method of test (4)
i)	pH*	6.0-8.5	SLS 1526
ii)	Electrical conductivity*, dS/m, max.	20	DSLS ISO 11265
iii)	Total Nitrogen content as N, per cent by mass, min.	1.0	SLS 645: Part 1
iv)	Total Potassium content as K_2O, per cent by mass, min.	0.5	SLS 645: Part 4
v)	Total Phosphorus content as P_2O_5, per cent by mass, min.	0.5	SLS 645: Part 5
vi)	Total primary nutrient, $(N+ P_2O_5+ K_2O)$ per cent by mass, min	2.0	SLS 645: Part 1, SLS 645: Part 4, SLS 645: Part 5
vii)	Organic carbon per cent by mass, min.	5.0	Appendix B

* *Mentioned the dilution factor in the test report.*

Microbiological requirements

The product shall not exceed the microbiological limit given in Table 2 when tested according to the method prescribed in Column 4 of the Table 2.

TABLE 2 – Microbiological limits for liquid organic fertilizers

Sl No. (1)	Test organism (2)	Limit (3)	Method of test (4)
i)	Faecal *coliform* MPN, per ml	Absent	SLS 516: Part 3
ii)	*Salmonella*, per 25 ml	Absent	SLS 516: Part 5

Requirement for limits of potentially toxic elements

CamScanner

The product shall not exceed the limits for potentially toxic elements given in Table 3, when tested as prescribed in Column 4 of the Table 3.

TABLE 3 - Limits for potentially toxic elements for liquid organic fertilizers

Sl No. (1)	Elements (2)	Limit, mg/kg (maximum) (3)	Method of test (4)
i)	Arsenic, as As	0.5	AOAC 2006.03
ii)	Cadmium, as Cd	0.5	
iii)	Chromium, as Cr	0.5	
iv)	Lead, as Pb	1.0	
v)	Mercury, as Hg**	0.5	

***EPA 7473 can be used as alternative method for Hg determination.*

PACKAGING

The product shall be packaged in sound and strong compatible bottles, containers or packages. Suitable packaging materials include plastic or glass or any other non-rusty materials. The product may also be supplied in bulk containers agreed upon between the purchaser and the vendor.

MARKING AND/ OR LABELLING

The following shall be marked or labelled legibly and indelibly on each bottle or package:

a) Name of the product as "Liquid Organic Fertilizers";
b) Name and address of the manufacturer, packer or distributor;
c) Registered trade mark if any;
d) Batch or code number;
e) Net content in metric units;
f) Date of manufacture;
g) Date of expiry;
h) Primary nutrient content;
k) Crops for which it is intended;
m) Dilution ratio/ Instructions for use; and
n) Storage/disposal instructions;

CamScanner

(5)

කොම්පෝස්ට් පොහොර මෙ.ටොන් 10ක් සඳහා දළ වියදම් ඇස්තමේන්තුව :-

අලුත්පිලව් අතුරුනුව (ප්‍රැක්ටර් ඇලෑඩ)	08	- රු. 80,000.00
නයිට්‍රජන් (ප්‍රැක්ටර් ඇලෑඩ)	10	- රු. 15,000.00
පොස්පරස් (ප්‍රැක්ටර් ඇලෑඩ)	10	- රු. 20,000.00
පොටෑෂ් අවශ්‍යතා (ප්‍රැක්ටර් ඇලෑඩ)	02	- රු. 12,000.00
එප්සම්වල රේක් ඇසිස්ටන්ට් (කි.ග්‍රෑ.)	500	- රු. 8,000.00
අමු ද්‍රව්‍ය සඳහා වියදම		= රු. 135,000.00

වෙනත් වියදම් :-

ඉන්ධන ඩීසල් ලීටර් 25	- රු. 15,000.00
සල් ඔෆ්ලීස් කි.ග්‍රෑ. 20	- රු. 9,000.00
කම්කරු පුමාව 1500 × 30	- රු. 45,000.00
විදුලි බිල	- රු. 5,000.00
වෙනත් වියදම්	- රු. 6,000.00
නොවැළැක්විය හැකි වියදම්	- රු. 5,000.00
	= රු. 80,000.00

ඇසුරුම් රහිත මුළු පිරිවැය	- රු. 215,000.00
කි.ග්‍රෑ. එකක් සඳහා පිරිවැය	- රු. 21.50

COPY

CamScanner

CamScanner

දැඟුම	02
மின் மொழிபெயர்ப்பு	02
Annexure	02

MINUTES OF THE JOINT TECHNICAL EVALUATION COMMITTEE AND STANDING CABINET APPOINTED PROCUREMENT COMMITTEE MEETING

Nature of the Procurement Committee	Standing Cabinet Appointed Procurement Committee	**Name of the Procurement Entity**	On behalf of the Procurement Entities CFC Ltd. and CCF Ltd, State Ministry of Promoting the Production & Regulating the Supply of Organic Fertilizer, and Paddy & Grains, Organic Foods, Vegetables, Fruits, Chillies, Onion and Potato Cultivation Promoting, Seed Production and Advanced Technology Agriculture
Title of the Procurement	Procurement of Eco-friendly Fertilizer Locally manufactured Fertilizer for Yala – 2022 SMA/Proc/EFF/2022/Yala		
Meeting No. 02	**Date:** 23.02.2022	**Purpose** Consideration of the TEC report dated 21.02.2022 and price negotiation and finalization of the awarding prices.	

PRESENT

	Members of the SCAPC		Capacity
1	Eng. Ivan De Silva	Secretary Ministry of Irrigation	Chairman
2	Mr. D.M.L. Bandaranayake	Secretary Ministry of Agriculture	Member
3	Mr. M.N. Ranasinghe	Secretary, State Ministry of Promoting the Production & Regulating the Supply of Organic Fertilizer, and Paddy & Grains, Organic Foods, Vegetables, Fruits, Chillies, Onion and Potato Cultivation Promoting, Seed Production and Advanced Technology Agriculture	Member
4	Mr. W.M.M.B Weerasekara	Secretary, State Ministry of Provincial Coun... & Local Government	Member
5	Dr. Ajantha De Silva	Director General, Department of Agriculture	Member
6	Mr P.M.K. Hettiarachchi	Additional Director General Department of Development Finance	Member

CamScanner

CamScanner

	Members of the TEC		Capacity
